# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,052 — 1934 ம் ஹூ வைகாசிமீ 25 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் விளம்பரம்.

### 1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியா பரிபாலன கட்டளைச்சட்டம்.

*1934 ம் ஹூ ஏப்பிறில்மீ 6 ந் திகதியின் 8,042 ம் இலக்க இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.*

1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியா பரிபாலன கட்டளைச்சட்டத்தின் 25 ம் பிரிவின்படி மாத்தளை அரசிறை வருமானப் பிரிவுக்குரிய வித்தியா பரிபாலன சபையாரால் செய்யப்பட்டு வித்தியா சங்கத்தின் அங்கீகாரம் பெற்று மேற்குறித்த பிரிவின்படியும் 1931 ம் ஆண்டின் இலங்கை மந்திர ஆலோசனைச் சபைச் சட்டத்தின் 93 ம் பிரிவிற் குறித்துள்ள அதிகாரப்படியும் உத்தமனூர் தேசாதிபதி அவர்களால் உறுதிபடுத்தப்பட்ட உபவிதிகள்.

உத்தமனூர் கட்டளைப்படி,
சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா,
கல்வி மந்திரி.

கொழும்பு, 1934 ம் ஹூ மார்ச்சுமீ 21 ந் உ.

### உபவிதிகள்.

1927 ம் ஹூ செப்ரெம்பர்மீ 29 ந் திகதிகொண்டு 1927 ம் ஹூ செப்ரெம்பர்மீ 30 ந் திகதியின் 7,608 ம் இலக்க கெசெற் பத்திரிகையில் பிரசுரஞ்செய்யப்பட்ட உபவிதிகள் தவிர்க்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவன சேர்க்கப்படும்:—

1. சொற்பொருள் விளக்கம்.—"சிறுவன்" "சிறுமி" "பிள்ளை" என்னும் பதம் இங்கு A அட்டவணையில் விபரித்திருக்கும் இடப்பரப்புக்குள் வசிக்கும் ஒரு சிறுவனை அல்லது ஒரு சிறுமியை அல்லது ஒரு பிள்ளையைக் கருதும்.

"வரவு" என்னும் பதம் ஒழுங்குச்சட்டத்தில் விதித்த பிரகாரம் வரவு இடாப்பில் பதிந்திருக்கும் ஒரு முழுவரவு அமைந்ததாக ஒழுங்குச் சட்டத்தால் நியமிக்கப்பட்ட காலவரவையே கருதும்.

"ஒழுங்குச்சட்டம்" என்னும் பதம் மந்திர ஆலோசனைச் சபையோடுகூடிய உத்தம தேசாதிபதியவர்களனுமதி பெற்ற அவ்வக்காலத்திலுள்ள உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுககான சட்டத்தையே கருதும்.

"பிரிவுக்குரிய சபை" என்னும் பதம் மாத்தளை அரசிறை வருமானப் பிரிவுக்குரிய வித்தியா பரிபாலன சபையைக கருதும்.

"பாடசாலை" என்னும் பதம் வித்தியாதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தப் பாடசாலையையும் குறிப்பதுடன் இங்குள்ள B அட்டவணையில் விபரித்திருக்கும் பாடசாலைகளையும் அடக்கும்.

"ஒரு பிள்ளையின் கலவிக்குப் போதியதும், தகுந்ததுமான ஒழுங்கு", "நியாயமான காரணம்" என்னும் பதங்கள் 1920 ஆண்டின் 1 ம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 25 ம் பிரிவின் 2 ம், 3 ம் கீழ்ப்பிரிவுகளிலுள்ள கருத்தையே உடையனவாம்.

2. சபை வழமையாய் மாத்தளைக் கச்சேரியில் இரண்டு மாசத்துக்கு ஒரு தரம் சபையால் நியமிக்கப்பட்ட தினங்களில் கூடும்.

கூட்டங்களின் சமாச்சாரம் ஒரு குறிப்புப் புஸ்தகத்தில் வரையப்பட்டு அக்குறிப்பின பிரதிகள் கூட்டம் முடிந்தவுடனே அங்கத்தவர்களுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

4. (a) இவ்வுபவிதிகளின் நோக்கங்களுக்காக A அட்டவணையில் சொல்லப்பட்டிருக்கும் பகுதியான 1920 ம் ஆண்டின் 1 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 25 (c) ம் கீழ்பிரிவின்படி உபயோககரமான ஒழுங்குசெய்யப்பட்ட பகுதியாக எண்ணப்படும்.

(b) பாடசாலைக்குப் போகவேண்டிய பிள்ளைகள்.—6 வயசுக்குக் குறையாத அல்லது 14 வயசுக்குக் கூடாத ஒவ்வொரு சிறுவனின் பெற்ரோரும் 6 வயசக்குக் குறையாத அல்லது 12 வயசுக்குக்கூடாத ஒவ்வொரு சிறுமியின் பெற்ரோரும் அல்லது முஸ்லிம் தமிழ் சிறுமிகளானால் 6 வயசுக்குக் குறையாத அல்லது 10 வயசுக்குக் கூடாதவர்களாயுமுள்ள சிறுமிகளின் பெற்ரோரும் அச்சிறுவனை அல்லது சிறுமியைப் பாடசாலைக்குப் போகச்செய்யவேண்டும்.

(1) கல்விக்காகப் போதியதும் தகுந்ததுமான வேறு ஒழுங்குகள் செய்திருந்தால், அல்லது

(2) பாடசாலைக்குப் போகாதிருப்பதற்கு நியாயமான காரணமிருந்தால், அல்லது

(3) சிறுமிகளின் விஷயத்தில், பாடசாலையில் பெண் ஆசிரியை நியமிகசப்பட்டிராவிட்டால்,

(4) 8 வயசுக்குக் கீழான சிறுவர் சிறுமிகளின் விஷயத்தில் அவர்கள் வாசஸ்தலத்திலிருந்து அதிகம் கிட்டிய பாதையால் ஒரு கட்டைக்கு மேலான தூரத்தில் பாடசாலையிருநதால், அல்லது

(5) 8 வயசுக்கு மேற்பட்ட சிறுவர்களின் விஷயத்தில் அவர்கள் வாசஸ்தலத்திலிருந்து அதிகம் கிட்டிய பாதையால் இரண்டு கட்டைக்கு மேலான தூரத்தில் பாடசாலையிருந்தால், அல்லது

(6) 10 வயசுக்கும் 14 வயசுக்குமிடையிலுள்ள ஓர் சிறுவன் அல்லது ஓர் சிறுமியின் விஷயத்தில் அவன் அல்லது அவள் நான்காம் வகுப்புக்காக ஒழுங்குச் சட்டத்தால் விதிக்கப்பட்ட பரீட்சையில வாசினை எழுத்துக் கணிதம் என்பவற்றில் தான் சித்தி பெற்றதாக ஒரு வித்தியாதரிசியிடமிருந்து ஒரு சாட்சிப்பத்திரம்பெற்று பிரிவுக்குரிய வித்தியா பரிபாலன சபைத்தலைவரின் திருப்திக்குப் பிரயோசனமான தொழில் செய்துவந்தால்,

பாடசாலைக்குப் போதல் கட்டாயமானதல்ல.

5. வரவு நேரம் —சமான வயசுள்ள பிள்ளைகளின் படிப்புக்காக பாடசாலை திறந்திருக்கும் முழுநேரமே ஒவ்வொரு பிள்ளையும் பாடசாலையிற் தங்கியிருக்கும் நேரமாகும்.

6. சமயம்.—இவ்வுபவிதிகளில் யாதேனும்—

(a) 1920 ம் ஆண்டின் 1 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 15 ம் பிரிவின் 2 ம கீழ்பிரிவினால் ஏற்படுத்தியபடி சமயபாடநேரத்தில் பிள்ளைகள் வராமல் விடலாம் என்று உத்தரவுகொடுப்பதைத் தடைபண்ணமாட்டாது.

(b) எந்தப் பிள்ளையாவது பாடசாலையொன்றில் சேரும்போது அவன் ஞாயிற்றுக்கிழமை பாடசாலைக்கு அல்லது யாதும் சமய ஆராதனை இடத்துக்குப் போகவேண்டுமென்ற அல்லது போகாது விடலாமென்ற அல்லது சமயவிஷயங்களில் யாதும் போதனை பெறவேண்டுமென்ற நிபந்தனைகுட்படுத்தவும் மாட்டாது.

(c) எந்தப் பிள்ளையாவது தன் பெற்றோர் அனுசரிக்கும் சமயகூட்டத்தாரால் சமய அனுசரிப்புக்கென்று பிரத்தியேகமாய்க குறித்திருக்கும் எந்த நாளிலாவது பாடசாலைக்குப் போகவேண்டுமென்று கட்டாயப்படுத்தவும் மாட்டாது.

7. இவ்வுபவிதிகளை அல்லது இவைகளில் எதையாவது அனுசரியாதிருக்கும் அல்லது அசட்டைபண்ணும் அல்லது லது மீறும் ஒவ்வொரு பெற்றோரும் குற்றப்படுத்தப்பட்டபோது ஒவ்வொரு குற்றத்துக்கும் 5 ரூபாய்க்குமேற்படாத தெண்டமிறுப்பதற்கும் தொடர்ச்சியான குற்றமாகில் நாளொன்றுக்கு ஒரு ரூபாய்க்கு மேற்படாத மேதிக தெண்ட மிறுப்பதற்கும் பாத்திரராவர்.

8. எந்தப் பிரதம பாடசாலையாவது நாளாந்தப் போசன முதலியவைக்கான இடை நோங்களையும் சேர்த்து 6 மணித்தியாலத்துக்குமேல் மாணக்கருக்குப் படிப்பூட்டும் நோககத்தோடு திறந்திருக்கப்படாது. பாடசாலையின் வேலை ஆரம்பிக்கவேண்டிய நேரம் காரியஸ்தரின் அல்லது தலைமை உபாத்தியாயரின் அபிப்பிராயப்படி விடப்படலாம். ஆனால் எந்தப் பாடசாலையாவது காலமே 8 மணிக்கு முன்னதாயும் 10 மணிக்குப் பின்னதாயும் திறக்கலாகாது. பாடசாலை நோசூசி வித்தியாதரிசியால் அங்கீகரிக்கப்படவேண்டும்.

9. எந்தப் பிரதய பாடசாலையாவது பெரும்பாகத்துக்குரிய வித்தியாதரிசியின் அல்லது பிரிவுக்குரிய வித்தியாதரிசியின் உத்தரவின்படியொழிய ஒரு கிழமையில் 5 நாட்களுக்குமேலும் அல்லது ஒரு வருடத்தில் 180 நாட்களுக்குக் குறைந்தும் பாடசாலை வேலைக்காகத் திறந்திருக்கப்படாது.

### A அட்டவணை

மேற்கூறிய உபவிதிகளில் குறிக்கப்பட்ட பகுதியின் விபரம்.

மாத்தளை நகரசங்கப் பிரிவில் சேர்க்கப்பட்ட பகுதியைத் தவிர்ந்த மாத்தளைப் பிரிவு.

### B அட்டவணை.

(1) உதவி நன்கொடை பெறும் ஆங்கில பாடசாலைகள்.

கிறைஸ்ற் சேட்ச் ஆங்கில ஆண் பாடசாலை
அர்ச். தோமஸ் ஆங்கில ஆண் பாடசாலை
அர்ச். தோமஸ் ஆங்கில பெண் பாடசாலை
புத்த பாடசாலை
வீ. எம். எஸ். பெண் பாடசாலை
பாக்கிய வித்தியாலயம்

(2) அரசினர் சுவபாஷா பாடசாலைகள்.

அக்குரும்பொடை ஆண் பாடசாலை
அக்குரும்பொடை பெண் பாடசாலை
தம்பலை கலவன் பாடசாலை
டன்டுபெண்டிருப்பை ஆண் பாடசாலை
தல்லாவை ஆண் பாடசாலை
தல்லாவை பெண் பாடசாலை
திவில்லா சேசவு பாடசாலை
கலபொடை கலவன் பாடசாலை
கல்கட்டிவிலை ஆண் பாடசாலை
கலவெல கலவன் பாடசாலை
கல்வெல தமிழ் பாடசாலை
கல்மினிய கலவன் பாடசாலை
கரஸ்கம கலவன் பாடசாலை
இம்புல்பிற்றியா பெண் பாடசாலை
கைகாவெலை கலவன் பாடசாலை
கலுந்திவை ஆண் பாடசாலை
காகாகல கலவன் பாடசாலை
கொங்காகாவெல ஆண் பாடசாலை
குறிவெல கலவன் பாடசாலை
பலபத்வெல தச்சவேலைப் பாடசாலை
பன்னம்பிட்டி ஆண் பாடசாலை
புப்பிளிய ஆண் பாடசாலை
புசெல்ல கலவன் பாடசாலை
புவக்பிட்டிய கலவன் பாடசாலை
விலியமபே ஆண் பாடசாலை
விலியம்பே பெண் பாடசாலை
விலியம்பே தச்சவேலைப் பாடசாலை
விளுவா ஆண் பாடசாலை
மடவெல கலவன் பாடசாலை
மடிப்பொலை ஆண் பாடசாலை
மடிப்பொலை பெண் பாடசாலை
மடிப்பொலை தமிழ்ப் பாடசாலை
மகலகொட்டுவ ஆண் பாடசாலை
மகலகொட்டுவ பெண்பாடசாலை
மாத்தளை தமிழ் பாடசாலை
நாயுல ஆண் பாடசாலை
நிகைம ஆண் பாடசாலை
நந்தாவை கலவன் பாடசாலை
நாகொல்ல கலவன் பாடசாலை
ஒப்பல்கல கலவன் பாடசாலை
உவிலிகந்தை ஆண் பாடசாலை
பலபத்வெல ஆண் பாடசாலை
பலபத்வெல பெண் பாடசாலை
பலபத்வெல தமிழ் பாடசாலை
தல்கோட்டை ஆண் பாடசாலை
தென்னை ஆண் பாடசாலை
யட்டவத்தை ஆண் பாடசாலை
யட்டவத்தை பெண் பாடசாலை

(3) உதவி நன்கொடை பெறும் சுவபாஷா பாடசாலைகள்.

அலுவிகாறை புத்த கலவன் பாடசாலை
தன்கந்தை புத்த கலவன் பாடசாலை
தம்பவெலை வீ. எம். எஸ்.
தொடன்தேனியா புத்த கலவன் பாடசாலை
எல்வெல வீ. எம். எஸ்.
குலன்கமுவ வீ. எம். எஸ்
கிறைஸ்ற் சேட்ச் கலவன் பாடசாலை
மாத்தளை இந்து கலவன் பாடசாலை
கூம்பியன்கொடை புத்த பெண் பாடசாலை
கொடுபெல்லெல்ல தமிழ் பாடசாலை
மகாவெல புத்த கலவன் பாடசாலை
செலுவாகந்தை எவ். எம். எஸ்.
நிககொல கலவன் பாடசாலை
பல்தேனியா வீ. எம். எஸ்.
றத்தோட்டை எவ். எம். எஸ்.
உடஸ்கிரிய வீ. எம். எஸ.
உக்குவெலை தமிழ் பாடசாலை
இந்து வெல்லாகல் பாடசாலை
வகக்கோட்டை ரோ. க. பாடசாலை
வேரகம எவ். எம். எஸ்.

(4) உதவி நன்கொடை பெறும் சுவபாஷா பாடசாலை.

வண்டாரபொலை அரசினர் முகாமை கலவன் பாடசாலை

---

### 1896 ம் ஆண்டின் 13 ம் இலக்க ஸ்தல யாத்திரைகளைப்பற்றிய சட்டம்.

1934 ம் ஆண்டு ஆடி மாசத்தில் கதிர்காம எசல திருவிழாவுக்கு வழக்கமான யாத்திரையை நோக்கி, உத்தம தேசாதிபதியவர்கள் 1897 ம் ஆண்டின் 7 ம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் 1931 ம் ஆண்டின் இலங்கைச் (இராச்சிய மந்திரசபை) சபையின் கட்டளையின் 93 ம் பிரிவினது அதிகாரங்களைக்கொண்டுசெய்த பிரமாணங்கள்.

டி. பீ. ஜயத்திலக்க,
சுயகாரிய மந்திரி.

சுயகாரிய மந்திரி கந்தோர்,
கொழும்பு, 1934 ம் ஆண்டு வைகாசிமீ 12 ந் திகதி.

பிரமாணங்கள்.

1. (a) கதிர்காமத்தில் 1934 ம் ஆண்டு எசல திருவிழாநடக்கும் நாட்களும் யாத்திரிகர் கதிர்காமத்தில் தங்கக்கூடிய காலமும் 17 நாட்கள் மாத்திரம்தான். அதாவது 1934 ம் ஆண்டு ஆடி மாதம் 11 ந் திகதி தொடக்கம் 27 ந் திகதி முடியும் வரைக்கும்.

(b) முதலாவதாக சொல்லப்பட்ட தேதிக்குமுன்பாக வருகிற அல்லது குறிக்கப்பட்ட காலத்துக்குப்பின் நிற்கிற யாத்திரிகர்களை குற்றவாளியர்களாக காணப்படும்.

2. "யாத்திரிகர் தங்கியிருக்கும் பாடி" ஊவா மாகாண அரசாட்சி ஏசண்டரின் மேல் அதிகாரத்திலும், "பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர்" என்று பெயர் கொடுக்கப்பட்ட பொறுப்பேற்றிருக்கும் உத்தியோகஸ்தரின் உடன் அதிகாரப் பார்வையிலும் இருக்கும். பின்னுவதாக சொல்லப்பட்ட உத்தியோகஸ்தருக்கு ஒரு வைத்திய உத்தியோகஸ்தரும் ஒரு பொலீஸ் உத்தியோகஸ்தரும் உதவி புரிவார்கள்.

3. கதிர்காமத்தில் திருவிழா நடக்கும் காலத்தில் தொற்று வியாதி உண்டுபடின் பார்வை செய்கிற உத்தியோகஸ்தருக்கு திருவிழாவை நிறுத்தவும் யாத்திரிகர்களை அந்த ஊரை உடனே விட்டு தங்கள் இடங்களுக்கு போகும்படி செய்யவும், இன்ன பாதையாற் போகவேண்டுமென்றும் நியமிக்கவும் தத்துவமுண்டு.

4. பார்வைசெய்யும் உத்தியோகஸ்தருக்கு கதிர்காமத்திலும் போகும் பயணத்திலும், திரும்பிச் செல்லும் பயணத்திலும் இதன்கீழ் குறிக்கப்பட்டவைகளைச்செய்ய அதிகாரமுண்டு :—

(a) யாத்திரிகர்களுக்கு கழுவவும், முழுகவும், தண்ணீ ரெடுக்கவும், தண்ணீர் குடிக்கவும், மலசலபாதைக்கு போகவும் வேறு வேறு தலங்களை நியமிக்கவும் ;

(b) அந்த வகுப்பைச்சார்ந்த யாத்திரிகர் தங்கியிருக்கும்படி வெவ்வேறு தலங்களை நியமிக்கவும்;

(c) யாத்திரிகர் கூட்டமாக இன்ன பாதையால் செல்லவேண்டுமென்று நியமிக்கவும் ;

(*d*) யாத்திரிகர்களுக்கு கொடுக்கப்படும் தீன் பகிர்ந்து கொடுத்த லைப்பார்த்து நடத்தவும் ;

(*e*) நோய்கொள்ளும் யாத்திரிகர்களுக்குத் தங்கியிருக்கும்படி வெவ்வேறே தலத்தை நியமிக்கவும் அவ்வாட்களுடன் வேறொருவரையும் கலவாமலிருக்கும்படி பண்ணவும், அவர்களுக்கு பயணம்போகக்கூடாதுபோனால் நிறுத்திவைத்திருக்கவும்.

இவ்விதமான காரணங்களைக்கொண்டு பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரினால் கொடுக்கப்படுகிற கட்டளையை ஏதாவது எவராவது மீறுபவர் குற்றவாளியாக காணப்படுவர்.

5. இந்தப் பிரமாணங்களின்பொருட்டு "யாத்திரிகர் தங்கியிருக்கும் பாடி" என்பதாவது :—

(*a*) கதிர்காமத்துப் பெரிய கோயிலைச்சுற்றி நாலுபக்கமும் அரைக்கட்டை தூரத்துக்குள் உள்ள பாகம்.

(*b*) செல்லக் கதிர்காமத்து பிள்ளையார் கோயிலைச்சுற்றி நாலு பக்கமும் காக்கட்டை தூரத்துக்குள் உள்ள பாகமும்.

6. பயணத்தில் அல்லது தங்கியிருக்கு மிடத்தில் சுகத்துக்குப் பழுதானதென்று பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் அல்லது அப்படியான உத்தியோகஸ்தர் இல்லாதிருந்தால், பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தர் காணுந் தீன் சாமானெல்லாவற்றையும் பறித்து அழித்துப்போடப் பொலீசார் தத்துவமுடையவராயிருப்பர். இந்தக் கடைமையை அல்லது வேறு எந்தக் கடைமையையும் பொலீசார் செய்யும்போது அவ்விதஞ்செய்யவிடாமல் எவராவது தடைபண்ணுபவர் குற்றவாளியாக காணப்படுவர்.

7. பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரிடமிருந்து அல்லது அவரால் தத்துவம் கொடுக்கப்பட்ட உத்தியோகஸ்தரிடமிருந்து உத்தரவுச்சீட்டு பெறுமல் மாடுகளை அல்லது வண்டி மாடுகளை தங்கியிருக்குமிடமிருந்து காற் கட்டைக்குட்பட யாராகுதல் கொண்டுவந்தால் அவர்கள் குற்றவாளியர்களாக காணப்படுவார்கள்.

8. உத்தரவுச்சீட்டுப் பெறுவோர் தங்கியிருக்குமிடத்தில் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரால் சனங்களின் பொதுச் சுகத்துக்காகவும் சுகாதாரத்துக்காகவும், போக்குவரவுக்கு தகுதியாயும் நியமிக்கப்படும் கட்டளைப் பிரமாணங்களை அனுசரிக்கக் கடைமைப்பட்டவர்களாவார்கள்.

9. (1) (*a*) எவ்வித சாமான்களையும் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் குறித்துவிடும் இடத்திலன்றி வேறெந்த இடத்திலும் விற்க வைத்திருக்கும் எவரும் குற்றவாளியாக காணப்படுவர்.

(*b*) பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் அல்லது வைத்திய உத்தியோகஸ்தர் அல்லது அவர்கள் இல்லாதிருந்தால் பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தர் சுகத்துக்குப் பழுதான போசனமென்று தீர்க்கும் எப்போசனத்தையும் விற்கும் எவரும் குற்றவாளியாக காணப்படுவர்.

2 (*a*) சகல சாப்பாட்டுக்கடைகளும், தேத்தண்ணீர் கோப்பிக் கடைகளும் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரின் திருப்திக்கு சுத்தமாகவும் சுகாதாரத்துக்கு ஏற்றதாயும் வைத்திருக்க வேண்டும்.

(*b*) விற்பனைக்கு வைத்திருக்கும் எல்லா விதமான கேக்வகைகளும் இனிப்புச்சாமான்களும், மற்றும் சமையல்செய்யப்பட்ட தீன்பண்டங்களும் இலையான்போகாதபடி செய்யப்பட்ட கண்ணாடிப் பெட்டிக்குள் வரிசையாக வைத்திருக்கவேண்டும்.

(*c*) மிஞ்சிய தேத்தண்ணீர், கோப்பி அல்லது பால் அல்லது மிச்சமான சாப்பாடு, சமையல்பாகக் கழிவுகள், அல்லது குப்பை, நிலத்திலே வீசப்படாது. ஆனால் இவைகளை சுகாதார வேலைபாட்கள் அப்புறப்படுத்துவதற்காக பின்னூற் குறிக்கப்பட்ட பாத்திரத்திலே சேர்த்துவைக்கவேண்டும்.

(*d*) வியாபாரத்துக்கு அல்லது வேறு முயற்சிக்குப் பாவிக்கப்படும் ஒவ்வொரு கட்டடத்திலும் அல்லது கொட்டிலிலும் நாலறை அடிக் கணத்துக்குக் குறையாமலுள்ள லோகத்தினால் அல்லது மரத்தினால் செய்யப்பட்ட ஊத்தைபெட்டியொன்று இருக்கவேண்டும். அதில் அந்த இடத்திலுள்ள குப்பை மற்றும் கழிவுசாமான்களை போடவேண்டும். குப்பை அல்லது கழிவுசாமான்கள் போடும்பொழுது அல்லது வெளியே எடுக்கும்பொழுது தவிர மற்றஎல்லா வேளைகளிலும் அதை ஒரு லோக அல்லது மரமூடியினால் மூடப்பட்டிருக்க வேண்டும்.

10. யாராயினும் கதிர்காமத்தில் தங்கியிருக்கும் காலத்தில் அரசாட்சியாரால் நியமித்திருக்கு மிடத்தைவிட வேறெந்த விடத்திலும் மலசலங் கழித்தால் அல்லது மலத்தை மண்ணால் மூடாவிட்டால், அல்லது பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரால் நியமிக்கும் தலத்துக்கு மேலே ஆற்றிலிறங்க அல்லது குளிக்கச் சம்பவித்தால் அப்படிச் செய்தவர்கள் குற்றவாளியர்களாக காணப்படுவார்கள்.

11. தொற்று வியாதியால் பீடிக்கப்பட்டு பார்வைசெய்கிற உத்தியோகஸ்தருக்கு அல்லது வைத்திய உத்தியோகஸ்தருக்கு அல்லது பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தருக்கு அது விஷயத்தை அறிவிக்கத் தவறும் எவரும் அல்லது அவ்வியாதி வந்த நோயாளியை ஒளித்து வைப்பதற்கு உதவி செய்யும் அல்லது தூண்டிவிடும் எவரும் குற்றமுடையவராகக் காணப்படுவர்.

12. சகல பேர்களும், பயணத்திலும் கதிர்காமத்திலும் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் அல்லது பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தர் நியமிக்கு மிடத்தில் விடுதிவிட வேண்டும். அப்படிச்செய்ய மறுக்கும் அல்லது செய்யாது விட்டுவிடும் எவரும் குற்றமுடையவராகக் கொள்ளப்படுவர்.

13. பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரின் உத்தரவை முன்னதாக பெற்றுக்கொள்ளாமல் கதிர்காமத்தில் பெரிய தெருக்களுக்குச் சேர்ந்த இடத்தை பிடிக்கக்கூடியதாக யாராவது ஒரு கொட்டிலைக் கட்டினாலும், அல்லது ஒரு கட்டடத்தை பெருப்பித்துக் கட்டினாலும் குற்றமுடையவராகக் காணப்படுவார்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஷூ-த்து 3 ம் இலக்கச சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் புது கொழும்பு லபுகம சந்திப்பு றோட்டு திருத்துதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 257. கிராமம்—பெத்தேகெதறமுல்லவும் வற்றறக்கவும்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | தெல்ககவத்த .. | தோட்டம், மரககறியுள்ளது .. | எச். டொன் ஜோன் அப்புகாமி, ஏச். டொன் சுவாறிஸ் அப்புகாமி, எச். பிறேலிஸ் அப்புகாமி, பெத்தேகெதறமுல்ல | 0 | 0 | 1·5 |
| 2 | ஷை .. | தோட்டம், (வெறுங்காணி) .. | ஷை .. .. | 0 | 0 | 1·1 |
| 3 | கொலையின்கும்புற ஒவித்த | சதுர்ப்புநிலம், மரக்கறியுள்ளது | எச். டொன் ஜோன் அப்புகாமி, பெத்தேகெதறமுல்ல, எச். கிறிகோறிஸ், மீகொட | 0 | 0 | 0·4 |
| 4 | கொலையின்கும்புற | நெல்வயல், ஒரு கமுகுவுள்ளது | ஷை .. .. | 0 | 0 | 8·3 |
| 5 | ஷை .. | நெல்வயல .. .. | ஷை .. .. | 0 | 0 | 4 |
| 6 | கொலையின்கும்புற ஓவித்த | சதுர்ப்புநிலம், வெத்திலைக்கொடியுள்ளது | ஷை .. .. | 0 | 0 | 1·1 |
| 7 | கொலையின்கும்புற | நெல்வயல் .. | ஷை .. .. | 0 | 0 | 4·3 |
| 8 | கொடகும்புற .. | ஷை .. .. | உவை. ஏ. கெண்டிறிக் பெறிரு, உவை. ஏ. சைமன் பெறிரு, உவை. ஏ. ஜொஹானு பெறிரு, ஜி. சொபயா ஹாமினேயும் அவரின் 6 பிள்ளைகளும், எல்லோரும் பெத்தேகெதறமுல்லவில் உள்ளவர்கள், உவை. ஏ. உவில்லியம் பெறிரு, உவை. ஏ. ஜொஹானு பெறிரு, எச். கிறிகோறிஸ் எல்லோரும் மீகொடவில் உள்ளவர்கள், உவை. ஏ. பொடிநோனு பெறிரு, கோறகல, பாதுக்க, உவை. ஏ. பேபி பெறிரு, வெறகல, பாதுக்க | 0 | 0 | 2·5 |
| 9 | கொடகும்புற .. | நெல்வயல் .. .. | ஷை .. | 0 | 0 | 3·6 |
| 10 | கொடகும்புற ஓவித்த | சதுர்ப்புநிலம், கிழங்குவகை உள்ளது | ஷை .. | 0 | 0 | 2 |
| 11 | ஷை .. | சதுர்ப்புநிலம், 8 வாழை அடி உள்ளது | ஷை .. .. | 0 | 0 | 2·5 |
| 12 | கொடகும்புற .. | நெல்வயல், ஏழு மூங்கில் மரமுள்ளது | ஷை .. .. | 0 | 0 | 3·5 |
| 13 | ஷை .. | நெல்வயல் .. | ஷை .. .. | 0 | 0 | 3·7 |

பிரதமபடத்து இல. A 258. கிராமம்—பனகொட.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | முடக்குவேவத்த | தோட்டம், 2 தென்னையுள்ளது | டபிள்யு. ஜேமிஸ் அப்பு, பனகொட .. | 0 | 0 | 5·6 |
| 2 | ஷை .. | தோட்டம், 2 பலாவும், 5 வெத்திலைக் கொடியுமுள்ளது | டபிள்யு. சேதன் பெறிரு, பனகொட .. | 0 | 0 | 3·8 |
| 3 | ஷை .. | தென்னங்காணி, ஒரு தென்னையுள்ளது | ஜே. ஆர். மாட்டின்ஸ் ரயின், 191, கவலக்ரவுன், கொழும்பு | 0 | 0 | 3·3 |
| 4 | ஷை .. | றப்பர் நிலம், 2 றப்பர்மரமுள்ளது | ஷை .. .. | 0 | 0 | 15·6 |

பிரதமபடத்து இல. A 259. கிராமம்—கெகேனுவலே.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆண்டியேமடமேலந்த | தோட்டம், 1 தென்னையுள்ளது | எச். சைமன் அப்பு, கெகேனுவல .. | 0 | 0 | 0·5 |
| 2 | ஷை .. | தோட்டம், 2 தென்னையும், 1 ஈரப் பலாவுமுள்ளது | ஏ. பத்தோகாமியும், எச். சைமன் அப்புவும் கேகேனுவல (வாக்குவாதத்திலிருக்கிறது | 0 | 0 | 3·3 |
| 3 | ஷை .. | தோட்டம், 1 தென்னையுள்ளது | ஷை .. .. | 0 | 0 | 0·5 |
| 4 | ஷை .. | தோட்டம், 3 தென்னையும் 1 பலாவும், 5 கமுகுவுமுள்ளது | எச். சைமன் அப்பு, கெகேனுவல .. | 0 | 0 | 6·6 |
| 5 | ஷை .. | தோட்டம், 3 தென்னையும், 4 கமுகுவும், 1 மாவும், 1 கொடபொரு மரமும், 1 மூங்கில்பத்தையும் கானின் பகுதியுமுள்ளது | ஏ. பத்தோகாமி, கெகேனுவல .. | 0 | 0 | 6·9 |
| 6 | சிறிமெதுற எஸ்றேற் அல்லது ஆண்டியமடமேலந்த | வெறுங்காணி .. | டாளிபற்லர் அண்ட் கொம்பெனி (சுப்பிறின்ரன் மிஸ்றர் எவ். பி. காற்றர், பாதுக்கை) | 0 | 0 | 0·5 |
| 7 | ஆண்டியமடமேலந்த | தோட்டம், 2 றப்பர்மரமும் கானின் பகுதியுமுள்ளது | ஏ. பதோகாமி, கெகேனுவல .. | 0 | 0 | 3·6 |

பிரதமபடத்து இல. A 260. கிராமம்—வெற்றறக்க.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பின்னலந்த .. | றப்பர் நிலம், 22 றப்பர்மரமும், 3 கமுகுவுமுள்ளது | எச். விஜயவர்த்தனவின் நோனு, இல. 249, காலி ரோட்டு, கொள்ளுப்பிட்டி | 0 | 1 | 6·5 |
| 2 | ஷை .. | றப்பர்நிலம், 17 றப்பர் மரமுள்ளது | ஷை .. .. | 0 | 1 | 10·2 |

பிரதமபடத்து இல. A 261. கிராமம்—கங்வெலஇகல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கனத்தேவத்த அல்லது துந்றன ககவத்த | தோட்டம், 1 வாழையுள்ளது .. | ஜே. டேவித் அப்பு, கங்வலஇகல .. | 0 | 0 | 0·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அககாணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்தப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஹூ ஆடி மாசம் 13 ௳ தேதியிலன்று 9:30 மணிக்கு பாதுக்கை வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின்தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1934 ம் ஹூ வைகாசிமீ 21 ௳ உ.

டபிள்யு. எச். மூர்,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7ம் பிரிவின் பிரகாரம் பொறலேஸ்கொமுவ ரோட்டில் உடாமுல்லை அந்தலையில் றெயில்வே லெவல் குரோசிங் ரோட்டு அகலித்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 335. குறிச்சி—உடாமுல்ல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ககத்தககவத்த .. | தோட்டம், (வெறுங்காணி) .. | ஜீ. டி. இறகொறி, உடாமுல்லை | 0 | 0 | 0·8 |
| 2 | ஷை .. | தென்னங்காணி, 5 தென்னையும் 1 கமுகுவும் ஒரு அகழின் பகுதியுமுள்ளது | ஷை .. | 0 | 0 | 6·9 |
| 3 | நாககவத்த .. | தென்னங்காணி, 1 தென்னையும், 1 கமுகுவும், 1 பருத்தியும், 1 தோடையும், 1 ஜம்போல மரமும் ஒரு பலாக்கன்றும் உள்ளது | தேவகெற்றிகே ஜொஹான சில்வா, உடாமுல்லை | 0 | 0 | 1·9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஹூ ஆடி மாசம் 17 ௳ தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1934 ம் ஹூ வைகாசிமீ 21 ௳ உ.

டபிள்யு. எச். மூர்,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் குடாவெவ றெயில்வே ஸ்டேஷனுக்குப் போவதற்காக ஒரு ரோட்டு திறப்பதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 148. குறிச்சி—கலாமுன.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஹொறகந்தஎலகும்புற .. | நெல்வயல் .. | வலகாபிட்டி அத்துறுகமகே சிஞ்ஞோ கயிதே .. | 0 | 0 | 18 |
| 2 | — .. | வயல் அணை .. | ஷை .. | 0 | 0 | 1·2 |
| 3 | ஹொறகந்தஎலகும்புற .. | நெல்வயல் .. | ஷை .. | 0 | 0 | 25 |
| | | | | 0 | 1 | 4·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷூ 5-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஷூ (ஜூன்) ஆனி மாசம் 23 ந் தேதியிலன்று காலை 9 மணிக்கு யாருவில்லு வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடமைதைகளினது தன்மையையும் அவ்வுடமைதைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புத்தளம் கச்சேரி,
1934 ம் ஷூ (மே) வைகாசிமீ 15 ந் உ.

ஏ. ஈ. கிறிஸ்தோபல்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## 1912 ம் ஆண்டின் 8 ம் இலக்க மதுபானத் தீர்வைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்.

*யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கிலுள்ள 1934–1935 ம் ஆண்டின் கள்ளுக்குத்தகை விற்பனவு.*

1929 ம் ஆண்டு சித்திரை மாதம் 12 ந் திகதியில் வெளிவந்த 186 ம் இலக்கத்தைக்கொண்ட மதுபான அறிவிக்கைக்கும் 1934–1935 ம் ஆண்டுக்குரிய கள்ளுக்குத்தகை விற்பனவுக் கட்டுப்பாடுகளுக்கும் அமைய, 1934 ம் ஆண்டு ஆடி மாதம் 1 ந் திகதி தொடக்கம், 1935 ம் ஆண்டு ஆனி மாதம் 30 ந் திகதிவரையும், பின்னூற் காணப்படும் தவறணைகளில் சில்லறையிற் கள்ளுவிற்கும் உரித்தை வேண்டுவதற்கு "றெண்டர்" கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஒவ்வொரு கேள்விக்காரரும், கேள்விப்பத்திரத்தோடு 16, 17, 19 ம் தவறணைகளுக்கும் 21 தொடங்கி 26 வரையும் உள்ள தவறணைகளுக்கும் ரூபா 100 வீதமும், தொகுக்கப்பட்ட (6 ம், 8 ம்), (14 ம், 15 ம்), (32 ம், 33 ம் தவறணைகளுக்கு, ஒவ்வொரு தொகுப்புக்கும் ரூபா 300 வீதமும், மற்றும் தவறணைகளுக்கு ரூபா 150 வீதமும் திறைசேரியில் அல்லது கச்சேரியில் வைப்புப்பணங்கட்டி அதற்கு அறிகுறியாக வாங்கிய பற்றுச்சீட்டை அணைத்துவிட வேண்டும். கேள்விப்பத்திரக் கடதாசிகள் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.

3. தவறணைகள் பின்வருமாறு தொகுக்கப்பட்டிருக்கும் :—

(1) தொகுப்பு { 6 சுண்டிக்குளி கொய்யா தோட்டம்
8 கரையூர்

(2) தொகுப்பு { 14 புலோலி மேற்கு
15 பருத்தித்துறை

(3) தொகுப்பு { 32 மாதகல்
33 பெரியவிளான்.

றெண்டர் கேட்பவர் ஒவ்வொரு தொகுப்புக்கும் ஒரே றெண்டர்தான் கேட்கலாம், மற்றத் தவறணைகள் தனித்தனியே விற்கப்படும். ஒரு தவறணைக்கு ஒரு றெண்டருக்குமேல் ஒருவர் அனுப்பப்படாது.

4. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தையும் ஒரு என்வலப்பில் அடைத்து அந்த என்வலப்பின் இடது மேற்புறத்தில், கேள்விகேட்கப்படும் தவறணையின் அல்லது தொகுக்கப்பட்ட தவறணைகளின் இலக்கத்தை அல்லது இலக்கங்களையும் பெயர் அல்லது பெயர்களையும் எழுதியிருத்தல் வேண்டும்.

5. "றெண்டர்" கேள்விகள் குறைவாயிருந்தால், தவறணைகளை ஏலத்தில் விற்கும் உரித்து கவண்மேந்து ஏசண்டருக்கு உண்டு.

6. உரித்தைக்கொண்ட கொள்வனவுகாரன் இன்னார் என்று அறிவிக்கப்பட்டவுடனே அவர் கட்டுப்பாட்டுக் கொந்தீசுகளுக்குக் கைகொப்பமிட்டுக் கவண்மேந்து ஏசன்றரிடம், உரித்தின் இரண்டுமாதக் குத்தகையளவான ஓர் தொகையைப் பிணைப்பணமாகக் கட்டவும் வேண்டும்.

7. கொந்தீசுக கட்டுப்பாடுகளையும் வேறு வேண்டிய விபரங்களையும் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

8. 1934 ம் ஆண்டு சித்திரை மாதம் 23 ந் திகதி வெளிவந்த 260 ம் நம்பர் மதுபான அறிவிக்கையின்படி 1934 ம் ஆண்டு ஆடி மாதம் 1 ந் திகதி தொடக்கம் வலிகாமம் வடககுப் பகுதியில் யாராவது எவ்வளவு கள்ளாகிலும், மதுபான சுப்பிறீன்ரென்டன்றுக்குக் கீழ்தரமில்லாத உத்தியோகஸ்தரின் "பாஸ்" அல்லது உத்தரவுச் சீட்டில்லாமல் வைத்திருத்தல் அல்லது ஏற்றுமதிசெய்தல் தடிக்கப்பட்டிருக்கிறது, என்பதை கேள்விப்பத்திரகாரர் முக்கியமாய்க கவனிக்க வேண்டியது.

9. 1 ம் நம்பர் தொடக்கம் 10 ம் நம்பர் வரையும் உள்ள தவறணைகளுககும் இதற்குள் அடங்கிய (6 ம் 8 ம்) தொகுக்கப்பட்ட தவறணைகளுக்கும் முறபகல் 10 மணிக்குமேல் றெண்டர் பத்திரங்கள் ஏற்கப்படமாட்டாது. 11 ம் நம்பர் தொடக்கம் 20 ம் நம்பர் வரையும் உள்ள தவறணைகளுக்கும், இதற்குள் அடங்கிய (14 ம், 15 ம்) தொகுக்கப்பட்ட தவறணைகளுக்கும் முற்பகல் 12 மணிக்குமேல் றெண்டர் பத்திரங்கள் ஏற்கப்படமாட்டாது. 21 ம் நம்பர் தொடக்கம் 34 ம் நம்பர் வரையும் உள்ள தவறணைகளுக்கும் இதற்குள் அடங்கிய தொகுக்கப்பட்ட 32 ம், 33 ம் தவறணைகளுககும் பிற்பகல் 3 மணிக்குமேல் றெண்டர் பத்திரங்கள் ஏற்கப்படமாட்டாது. விற்பனவு 1934 ம் ம் ஆண்டு ஆனி மாதம் 5 ம் திகதி செவ்வாய்க்கிழமையிலன்று நடைபெறும்.

இ. றொட்றிகோ,
வடமாகாணக் கவுண்மேந்து ஏசண்டர்.

யாழ்ப்பாணம் கச்சேரி,
1934 ம் ஆண்டு வைகாசிமீ 16 ந் உ.

### தவறணைகளின் விபரம்.

முற்பகல் 10 மணிக்கு றெண்டர் மூடப்படும் தவறணைகள்.

| நம்பர். | பெயர். | | பகுதி. |
|---|---|---|---|
| 1 | கரம்பன் .. | .. | தீவு |
| 2 | சுருவில் .. | .. | தீவு |
| 3 | அல்லைப்பிட்டி | .. | தீவு |
| 4 | சிவியாதெரு மேற்கு | .. | யாட்பாணம் |
| 5 | பாசையூர் .. | .. | ஷை |
| 6 | சுண்டிககுளி (கொய்யாத்தோட்டம்) | | ஷை |
| 7 | சுண்டிக்குளி (தல்லாலை) | .. | ஷை |
| 8 | கரையூர் .. | .. | ஷை |
| 9 | வண்ணார்பண்ணை தென்கிழக்கு (தாராக்குளம்) | | ஷை |
| 10 | வண்ணார்பண்ணை தென்கிழக்கு (ஆரியகுளம்) | | ஷை |

முற்பகல் 12 மணிக்கு றெண்டர் மூடப்படும் தவறணைகள்.

| நம்பர். | பெயர். | | பகுதி. |
|---|---|---|---|
| 11 | அச்சுவேலி .. | .. | வலிகாமம் வடக்கும் கிழக்கும் |
| 12 | புத்தூர் மேற்கு | .. | ஷை |
| 13 | அல்வாய் மேற்கு | .. | வடமராட்சி |
| 14 | புலோலி மேற்கு | .. | ஷை |
| 15 | பருத்தித்துறை | .. | ஷை |
| 16 | குடத்தனை .. | .. | ஷை |
| 17 | நாகர்கோயில் | .. | ஷை |
| 18 | சாவகச்சேரி | .. | தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, கரச்சி |
| 19 | அல்லாரை | .. | ஷை |
| 20 | மிருசுவில் .. | .. | ஷை |

பிற்பகல் 3 மணிக்கு றெண்டர் மூடப்படும் தவறணைகள்.

| நம்பர். | பெயர். | | பகுதி. |
|---|---|---|---|
| 21 | எழுதுமட்டுவாள் வடக்கு | .. | தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, கரைச்சி |
| 22 | எழுதுமட்டுவாள் தெற்கு | .. | ஷை |
| 23 | புலோப்பளை | .. | ஷை |

| நம்பர். | பெயர். | | பகுதி. |
|---|---|---|---|
| 24 | மாசார் | .. | தென்மராட்சி பச்சிலைப்பள்ளி, கரைச்சி |
| 25 | வண்ணார்பண்ணை | .. | ஷை |
| 26 | கிளாலி | .. | ஷை |
| 29 | திருநெல்வேலி கிழக்கு | .. | யாட்பாணம் |
| 30 | கோப்பாய் தெற்கு | .. | வலிகாமம் கிழக்கு |
| 31 | சங்கானை | .. | வலிகாமம் மேற்கு |
| 32 | மாதகல் | .. | ஷை |
| 33 | பெரியவிளான் | .. | ஷை |
| 34 | வல்வெட்டித்துறை | .. | வடமராட்சி |

குறிப்பு.—4, 5, 6, 7, 8, 9, 10, 14, 15 ம் தவறணைகள் காலை எட்டு மணிக்குத் திறக்கப்பட்டு மாலை ஏழு மணிகு மூடப்படல் வேண்டும். மற்றைய தவறணைகள் காலை 8 மணிக்குத் திறக்கப்பட்டு மாலை $6\frac{1}{2}$ மணிக்கு மூடப்படல் வேண்டும்.

## உத்தியோக சம்பந்தமில்லாதவர் அறிவித்தல்.

1907 ம் ஆண்டின் 1 ம இலக்கக் கட்டளைச் சட்டத்தின 8 ம் பிரிவிற சுட்டிய 1 ம் அட்டவணையின் B பிரிவின்படி அறிவித்தல்.—மட்டுக்களப்பு ஆரப்பற்றை பரமக்குட்டியார் ஐயம்பிள்ளையாகிய நான் என்னை மட்டுக்களப்பு டிஸ்திறிக் அக்கரைப்பற்று கருங்கொட்டித்தீவிலே தமிழ்ப் பாஷையில் வேலைபார்க்கும் நொத்தாரிஸ்வாக ஏற்றுக்கொள்ளும்படி இன்று தொடக்கம் மூன்று மாசங்களுக்குப்பின் பதிவுகாரியஸ்த தலைவர் அவர்கட்கு விண்ணப்பஞ்செய்ய எண்ணி இருக்கிறேன் என்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

ப. ஐயம்பிள்ளை.

ஆரப்பற்றை, மட்டுக்களப்பு,
1934 ம் ஆண்டு சித்திரைமீ 25 ந் திகதி.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.